Register No. | | | | | | | | |

**FSC**

**3140–16**

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.A.,B.L. DEGREE EXAMINATIONS, MAY 2016.

(Five Years Regular Course)

Fourth Year — Seventh Semester

ENVIRONMENTAL LAW

Time : Three hours                                Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவுக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றனுக்கு விடையளிக்கவும்.

1. Define environment. Explain environmental law's relation with other disciplines.

   சுற்றுச்சூழல் என்பதை வரையறு. சுற்றுச்சூழல் சட்டத்திற்கும் மற்ற துறைகளுக்கும் உள்ள உறவினை ஆராய்க.

Scanned by CamScanner

2. State the constitutional obligation on the State and the citizens duty to protect the natural environment.

இயற்கை சுற்றுச் சூழலை பாதுகாக்க இந்திய அரசமைப்பிலான நாட்டின் கடப்பாட்டினையும் மற்றும் குடிமக்களின் கடமைகளையும் குறிப்புரைக்க.

3. Examine the constitution and functions of the Wildlife Advisory Board under the Wildlife (protection) Act, 1972.

1972 ஆம் ஆண்டின் வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழான வனவிலங்குகள் ஆலோசனை வாரியத்தின் அமைப்பு மற்றும் பணிகளை எடுத்துரைக்கவும்.

4. Analyse the relation of the principles of the Earth Summit in achieving environmental sustainability between generations.

தலைமுறைகளுக்கிடையேயான சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் புவி உச்சி மாநாட்டின் கொள்கைகளின் தொடர்பினை பகுப்பாய்வு செய்க.

5. Examine the constitution, power and functions of the state Pollution Control Boards under the Water (prevention and control of pollution) Act, 1974.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசுக் கேட்டினை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டத்தின் கீழான மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களின் அமைப்பு, அதிகாரம் மற்றும் பணிகளை விவரிக்கவும்.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டினுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Biosphere

உயிர் மண்டலம்

(b) Public Nuisance

பொதுத் தொல்லை

(c) Doctrine of Absolute Liability

முழு பொறுப்புரிமைக் கோட்பாடு

(d) Recognition of Zoos

மிருகக் காட்சி சாலையின் அங்கீகாரம்

(e) National Water Policy 1987

தேசிய நீர் கொள்கை, 1987

(f) Brundtland Commission

பிரண்ட்லாண்ட் குழு

(g) Central Air Laboratory

மத்திய காற்று பரிசோதனைக் கூடம்

(h) Coastal Zone Management

கடலோர மேலாண்மை



Scanned by CamScanner

(i) T.N. Godavarman Thirumal Pad vs. Uni[illegible] of India

டி.என். கோதவர்மன் திருமால்பட் -எதிர்-இந்திய யூனியன்

(j) Rain Water Harvesting

மழை நீர் சேகரிப்பு

PART C — (4 × 4 = 16 marks) → 15 Mins per Question → 1 Hour.

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கனுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Deccan Railways proposed a mega project of laying 600 km railway line through the East coast. Sacred Lives, an NGO filed a Public Interest Litigation claiming if the project is executed 30 acres of marsh lands would be affected. Decide.

கிழக்கு கடற்கரையில் 600 கி.மீ தூரத்திற்கு ரயில்பாதை அமைக்கும் ஒரு பெரும் திட்டத்தை டெக்கான் ரயில்வே முடிவு செய்தது. இத்திட்டத்தை நிறைவேற்றினால் 30 ஏக்கர் பரப்பளவில் மென்மையான சதுப்பு நிலங்கள் பாதிக்கப்படுமென "புனித வாழ்வு" என்ற அரசு சாரா அமைப்பு பொது நல மனுவை தாக்கல் செய்தது. தீர்மானிக்கவும்.



The Central Government proposed to construct a Nuclear Power Plant in 'X' state. Mr. 'Y' an environmental activist filed a writ before the High Court on the ground that the environmental Impact Assessment Report did not contain any clause regarding liability and therefore clearance must be withdrawn. Decide.

'X' மாநிலத்தில் அனு மின் உற்பத்தி நிலையத்தை நிறுவிட மத்திய அரசு முடிவு செய்தது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சான்றிதழ் அறிக்கையில் நிவாரணம் வழங்குவது குறித்து எந்த வகையமும் இல்லையெனவும் ஆதலால் அனுமதியை திரும்பப் பெற வேண்டுமெனவும் திரு. 'Y' எனும் சுற்றுச்சூழல் ஆர்வலர் உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்கிறார். தீர்மானிக்கவும்.

9. A tribal without any licence, extracts medicinal plants from the protected forest and trades with a foreign company. Authorities under the wildlife protection seized the medicinal plants and prosecuted him. Decide.

பழங்குடியினர் ஒருவர் உரிமம் பெறாமல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து மருத்துவ செடிகளை சேகரித்து வெளிநாட்டு நிறுவனத்துடன் வாணிகம் செய்து வந்தார். வனவிலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த மருத்துவ செடிகளை பறிமுதல் செய்து அந்த பழங்குடியினர் மீது நீதிமன்றத்தில் குற்ற வழக்கு பதிவு செய்தனர். தீர்மானிக்க.



Scanned by CamScanner

10. Karnataka Government converted a public pa[rk] into a private hospital. The residents of that area filed a writ petition and prayed to issue an order cancelling the conversion order. Decide.

கர்நாடக அரசானது ஒரு பொதுப் பூங்காவை தனியார் மருத்துவமனையாக மாற்றியது. அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அந்த மாற்று ஆணையை செல்லாததென கூறிட நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தனர். தீர்மானிக்கவும்.

11. The State Government proposed city Garbage Unit near marsh lands. The nearby residents of the locality complained about foul smell and cause for ill health. A petition was filed before the court to relocate the proposed site and to carry out construction of solid waste management system far away from residential area – Decide.

மாநில அரசு நகர குப்பை கூடத்தை சதுப்பு நிலங்களுக்கு அருகாமையில் அமைக்கும் திட்டத்தை அறிவித்தது. இது உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் என்று உள்ளூர் வாசிகள் புகார் அளித்தனர் மேலும் குப்பை கூடம் அமைக்கும் இடத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைத்து மற்றும் குடியிருப்புக் பகுதிக்கு தொலைவான இடத்தில் திட கழிவு மேலாண்மை அமைப்பு கட்டுமானம் மேற்கொள்ள நீதிமன்றம் ஆணையிட வேண்டும் என்று வழக்கிட்டனர். தீர்மானிக்கவும்.



In a reserved forest wild animals frequently got caught in the train tracks which resulted in the death of wild animals. A petition was filed before the High Court by an N.G.O. on the ground that railway authorities have a duty to protect the wild animals and must install satellite radar to monitor and to protect the animals from accident – Discuss the validity of the petition.

ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு காட்டில் அடிக்கடி விலங்கினங்கள் இரயில் பாதையில் சிக்கி மாண்டு வந்தன. ஒரு தொண்டு நிறுவனம் இதை தடுக்க வேண்டியும், வனவிலங்குகளை விபத்திலிருந்து பாதுகாக்கவும் இரயில்வே நிர்வாகத்திற்கு கடமை இருப்பதாகவும் செயற்கைகோள் கண்காணிப்பு கருவி பொருத்தி பாதுகாக்க கோரி உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தது. இம்மனுவின் செல்லுந்தன்மை குறித்து ஆராய்க.

---



Scanned by CamScanner

Register No. [ ]

**FSC**

**3307–16**

(For the candidates admitted from 2009–2010 onwards)

B.A.,B.L. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2016.

(Five Years Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAWS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Critically analyse the environmental policies in India.

இந்தியாவில் சுற்றுப்புறச்சூழல் குறித்த கொள்கைகளை திறனாய்வு செய்க.

Scanned by CamScanner

2. Mention the significance of various International Conventions to protect the environment.

சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்க உள்ள பல்வேறு பன்னாட்டு உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

3. Enumerate the principles evolved by the Supreme Court on environment.

சுற்றுப்புறச்சூழலுக்கு உச்ச நீதிமன்றம் உருவாக்கிய நெறிமுறைகளை எடுத்தியம்புக.

4. State the remedies available for environmental pollution under the Civil Procedure Code, 1908.

1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் சுற்றுப்புறச்சூழல் மாசுக்குண்டான தீர்வழிகளைக் கூறுக.

5. Discuss the role of social movements in environmental management.

சுற்றுப்புறச்சூழல் மேலாண்மைக்குரிய சமூக தொண்டு ஆர்வலர் இயக்கங்களின் பங்கினை விவாதிக்க.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டினுக்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Green tribunal

பசுமை தீர்ப்பாயம்



(b) Bio-Medical waste

உயிரி மருத்துவக் கழிவு

(c) Protector principle

பாதுகாப்பு நெறிமுறை

(d) Nairobi declaration

நைரோபி உடன்படிக்கை

(e) Rio plus 20 summit

ரீயோ ப்ளஸ் இருபது மாநாடு

(f) PAHAR

ப்பஹார்

(g) T.N. Godavarman Thirumulkpad vs. Union of India

டி.என். கோதவர்மன் திருமல்க்பாட்டு எதிர் ஒன்றிய இந்திய அரசு

(h) Green peace

பசுமை அமைதி

(i) Carbon sink

கார்பன் தொட்டி

(j) Precautionary principle

முன்னெச்சரிக்கை நெறிமுறை



Scanned by CamScanner

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கனுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. An handicrafts emporium sold ivory goods. 'Wildlife watch' an activist group filed a case before High Court and got favourable order banning the sale. The handicrafts emporium filed a case before the Supreme Court on the ground that it violates their fundamental right – Decide.

கைவினைப் பொருள் விற்பனையகம் ஒன்று யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தது. 'வன வாழ்வு பார்வை' ஆர்வலர் இயக்கம் இதை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்கிட்டு யானை தந்த பொருட்கள் விற்பனைக்கு தடை ஆணை பெற்றது. இத்தடையாணை தங்களின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாக கைவினைப் பொருள் விற்பனையகம் உச்ச நீதி மன்றத்தில் வழக்கிட்டது - தீர்மானிக்க.





8. 'A' illegally trades sea turtles in his pet shop. Turtles are considered to be lucky and therefore many bought turtles as hobby. 'Animals watch' an activist group sought closure of the pet shop on the ground that trading turtle is illegal and filed a case – Decide.

'அ' தனது செல்லப்பிராணி விற்பனையகத்தில் சிறிய கடல் ஆமைகளை சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்தார். சிறிய கடல் ஆமைகள் அதிர்ஷ்டத்தை தருவதாக நம்புவதால் பலர் இதனை பொழுது போக்கிற்காக வாங்கினர். 'விலங்குகள் கண்காணிப்பகம்' என்ற ஆர்வலர் குழு ஆமைகளை விற்பது சட்டத்திற்கு முரணான செயல் எனக் கூறி செல்லப்பிராணி விற்பனையகத்தினை மூட வேண்டும் என்று வழக்கிட்டனர் - தீர்மானிக்க.

9. The Government of India established a thermal power plant at Odisa. Fly ash emanated out of the plant which posed a threat to human health 'VIGILANT' a non-governmental organisation opposed the project and filed a case on the ground that it violates the fundamental rights – Decide.

ஒடிஷா மாநிலத்தில் அனல் மின் நிலையத்தை இந்திய அரசு நிறுவியது. இதன் விளைவால் அனல் மின் நிலையத்தில் ஆங்காங்கே பரவும் சாம்பல் வெளிவந்தது. இது மனித உடல் நலனுக்கு அச்சுறுத்தல் உண்டாக்கியதால் விஜிலெண்ட் என்ற தன்னார்வ தொண்டு அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்தது. மேலும் இது அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி வழக்கிட்டது - தீர்மானிக்க.



Scanned by CamScanner

10. 'A' in his poultry farm overused antibiotics for chicken production. The Indian Medical Association demanded an immediate ban on antibiotics. The owner of the poultry farm, 'A', filed a case on the ground that Indian Medical Association infringes their right to carry on their business. – Decide.

'அ' என்பவர் கோழி பண்ணையில் அதிக அளவில் நுண்ணுயிர் கொல்லி பயன்படுத்தி கோழிகளை வளர்த்தார். ஒருங்கிணைந்த இந்திய மருத்துவ சங்கம் நுண்ணுயிர் கொல்லி பயன்படுத்துவதற்கு உடனடி தடை விதிக்கக் கோரியது. இதை எதிர்த்து கோழிப்பண்ணை உரிமையாளர் இக்கோரிக்கை தன்னுடைய வணிக உரிமையை மீறுவதாக வழக்கிட்டார் - தீர்மானிக்க.

11. Government Environmental Agency found high level of toxic pesticides in Artificial drink of a famous soft drink company. It was reported in paper. The soft drink company filed a case against environmental agencies on the ground that it violates their rights – Decide.

அரசு சுற்றுப்புறச்சூழல் முகவாண்மை ஒரு புகழ்வாய்ந்த மென்பான நிறுமத்தின் தயாரிப்பு பானங்களில் அதிக அளவில் நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சு கொல்லி மருந்து இருப்பதாக அறிந்து அதனை நாளிதழில் செய்தியாக வெளியிட்டது. இவ்வெளியீடு தங்கள் உரிமைகளை மீறுவதாக கூறி அரசு சுற்றுப்புறச்சூழல் முகவாண்மையை எதிர்த்து வழக்கிட்டது - தீர்மானிக்க.



12. The Government of India diverted certain forest lands which are identified as 'Biological Treasure' for developmental activities. Tribals living in the area were also given job opportunities. 'BIOGROVE' a Non-governmental Organisation insisted that all these developmental activities are not be allowed as this would take away the rights of tribals and filed a case – Decide.

'பல்லுயிர் புதையல்' என்று அறிவிக்கப்பட்டுள்ள காடுகளை நிலங்களின் வளர்ச்சி திட்டங்களுக்காக இந்திய அரசு ஒதுக்கீடு செய்தது. அங்கு வாழும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டது. ஆனால் அவ்விடங்களில் வளர்ச்சி திட்டங்கள் எதுவும் அனுமதிக்கக் கூடாது எனவும், இது அக்காடுகளில் வாழும் பழங்குடியினரின் உரிமைகளை மீறுகின்றது என்று கூறி 'பயோ குரோவ்' என்ற அரசு சாரா அமைப்பு வழக்கொன்றினை தாக்கல் செய்தது - தீர்மானிக்க.

---



Scanned by CamScanner

Register No. [ ]

**FSC**

**2928–15**

# B.A./B.L. DEGREE EXAMINATIONS, MAY 2015.

(Five Years Regular Course)

Fourth Year / Seventh Semester

## ENVIRONMENTAL LAWS INCLUDING ANIMAL LAWS

Time : Three hours　　　Maximum : 100 marks

### PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவுக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றனுக்கு விடையளிக்கவும்.

1. Define Environment. Describe the various factors responsible for environmental pollution.

சுற்றுப்புறத்தை வரையறு. சுற்றுப்புறத்தை சீர்கேடு அடையச் செய்யும் பல்வேறு காரணக்கூறுகளை எடுத்துரைக்க.

Scanned by CamScanner

2. Explain the measures taken by the Central Government to tackle major environmental problems by formulating policy framework.

சுற்றுச்சூழல் குறித்த முக்கிய பிரச்சனைகளை எதிர் கொள்வதற்கு மத்திய அரசு திட்ட கொள்கை விளம்புகையில் மூலம் எடுத்த முயற்சிகளை விவாதிக்கவும்.

3. Examine the constitution, powers and functions of the Central Pollution Control Board under the Air Act, 1981.

1981 ஆம் ஆண்டு காற்று சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆராய்க.

4. Describe the role played by the social movements in environmental management in India.

இந்தியாவில் சுற்றுச்சூழல் மேலாண்மையில் சமூக இயக்கங்கள் ஆற்றியுள்ள பங்களிப்பினை விவரிக்க.

5. Examine the legal components of Earth Summit (Rio-declaration) in achieving environmental sustainability.

சுற்றுப்புற வளங்குன்றா வளர்ச்சியை அடைவதற்காக புவி உச்சி மாநாடு (ரியோ பிரகடனம்) எடுத்தியம்பியுள்ள பல்வேறு சட்டக் கோட்பாடுகளை ஆராய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Tiwari Committee

திவாரி குழு

(b) Fundamental Duties

அடிப்படை கடமைகள்

(c) Mass Tort Action

பெருமளவு தீங்கு

(d) Noise Pollution Rules, 2000

இரைச்சல் மாசு விதிகள், 2000

(e) Chipko movement

சிப்கோ இயக்கம்

(f) NEERI

நீரி

(g) Biodiversity

பல்லுயிர் பெருக்கம்

(h) Ozone layer

ஓசோன் அடுக்கு



Scanned by CamScanner

(i) National Water Policy, 1987

தேசிய நீர் வளக் கொள்கை, 1987

(j) Public Nuisance.

பொதுத் தொல்லை.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கனுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Govt. of Assam supplied bamboo at concessional rates to the tribal people for their livelihood. The tribal people made articles from the bamboo and sold it at the open markets. The forest officials blocked the article movement on the ground that these articles are forest produce and they are subjected to levy of tax? Is it sustainable? Argue.

அஸ்ஸாம் மாநில அரசு பழங்குடியினரின் வாழ்வாதாரத்திற்காக மூங்கிலை சலுகை விலையில் வழங்கியது. பழங்குடி மக்கள் அந்த மூங்கிலிலிருந்து பல்வேறு பொருட்களை தயாரித்து வெளி சந்தையில் விற்றனர். இப் பொருட்கள் காடு சார்ந்த பொருட்கள் என்றும் அவை வெளியே எடுத்துச் செல்லும் பொழுது வரி விதிக்கப்படும் என வனத்துறை அதிகாரிகள் தடை செய்தனர். இது நிலைக்கத்தக்கதா? வாதிடுக.



8. RAINBOW DYEING LTD Co., let its effluent in river Noyyal. The State Pollution Control Board ordered the Company to stop letting its effluents in the river as it amounted to public nuisance. The company challenged the order on the ground that the decision would violate their freedom to carry out trade and commerce. Decide.

ரெயின்போ டையிங் லிமிடெட் நிறுவனமானது தனது கழிவுகளை நொய்யல் நதியில் விட்டது. இது பொதுத்தொல்லை எனக் கருதி மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அந்த நிறுவன கழிவுகளை நதியில் வருவதை தடை செய்து உத்திரவிட்டது. இந்த உத்தரவு தங்கள் தொழில் மற்றும் வணிகம் செய்யும் சுதந்திரத்திற்கு எதிரானது என நிறுவனம் வாதிட்டது. தீர்மானிக்க.

9. The Municipal Corporation of Shimla took a decision to sterilise the stray dogs within the corporation limits to control their population. 'Save Lives', a voluntary organisation filed a Public Interest Litigation on the ground, the decision is against the provisions of Prevention of Cruelty to Animals Act, 1960. Is it maintainable? Argue.

சிம்லா நகராட்சியானது தன் நகராட்சிக்குள் தெரு நாய்களின் பெருக்கத்தை குறைப்பதற்காக அறுவை சிகிச்சை செய்ய ஓர் முடிவை எடுத்தது. SAVE LIVES என்ற தன்னார்வ தொண்டு நிறுவனமானது நகராட்சியின் இந்த முடிவானது விலங்குகள் படுவதை தடுப்பு சட்டம், 1960 க்கு எதிரானது என பொது நல வழக்கினை தொடுத்தது. இது நிலைக்கத்தக்கதா? வாதிடுக.



Scanned by CamScanner

10. The government a Karnataka gave clearance to convert a public park into hospital under the scheme of public and private partnership. Aggrieved by the decision, an NGO filed a Public Interest Litigation before the Karnataka High Court on the ground that it would violate wildlife and habitat. Decide.

கர்நாடகா அரசானது பொது மக்கள் பங்களிப்பு மற்றும் தனியார் பங்களிப்புடன் ஓர் மருத்துவமனை கட்டுவதற்காக பொது பூங்காவை மாற்றிட அனுமதித்தது. இந்த முடிவானது, வன உயிரினங்களையும் அவற்றின் வாழிடத்தையும் வெகுவாக பாதிக்கும் என்று கூறி, ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனம் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கினை தாக்கல் செய்தது. தீர்மானிக்க.

11. Central railways proposed a mega project of laying 6,000 K.M. railway line through Coastal Line. Most of the railways line will cover 350–450 meters from the Coastal Line. Makkal, an unregistered association objected it. Decide.

கடற்கரையோரத்தில் 6,000 கி.மீ. தூரத்திற்கு ரயில் பாதை அமைக்கும் ஒரு பெரும் திட்டத்தை மத்திய ரயில்வே உத்தேசித்தது. பெரும்பாலான வழித்தடங்கள் கடற்கரையிலிருந்து 350–450 மீட்டர் தொலைவிலேயே வந்தது. மக்கள் என்ற ஓர் பதிவு செய்யப்படாத நிறுவனம் இதற்கு ஆட்சேபணை செய்தது. தீர்மானிக்க.



12. A leading advocate and politician filed a writ petition demanding the government to take steps to control the sand quarrying in the southern part of the Tamil Nadu on the ground that it would lead to depletion of ground water in the districts. Argue.

புகழ் பெற்ற வழக்குரைஞர் மற்றும் அரசியல்வாதி மணல் குவாரியை கட்டுப்படுத்தாதலால் நிலத்தடி நீர் குறைந்துவிடும் எனவே அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என நீதிப்பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்தார். வாதிடுக.

---



Scanned by CamScanner

Register No. | | | | | | | | |

**FSC**

**2967–15**

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.,B.L. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2015.

(Five Years Regular Course)

Fourth Year/Seventh Semester

ENVIRONMENTAL LAW

Time : Three hours — Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Elucidate the compensatory mechanism for environmental damages to persons and property under the National Green Tribunal Act.

   தேசிய பசுமை தீர்ப்பாயச் சட்டத்தின் கீழ் நபர் மற்றும் சொத்தின் மீது எழும் சுற்றுப்புற தீங்கிற்கு உள்ள இழப்பீடு முறையை வழக்குகளுடன் விவரி.

Scanned by CamScanner

2. Examine the causes, sources and effects of environmental pollution.

சுற்றுச் சூழல் மாசின் விளைவுகள், மூலங்கள் மற்றும் காரணங்களை கூர்ந்து ஆராய்க.

3. Polluter pay principle is an essential feature of sustainable Development – Comment.

மாசுக்கேடு விளைவிப்பவரே இழப்பீடு செலுத்தும் கோட்பாடு நின்று நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது – விமர்சிக்க.

4. "Forests help in maintaining ecological balance" – Comment.

சுற்றுச் சூழல் சமநிலையை பாதுகாப்பதற்கு காடுகள் பெரிதும் உதவுகின்றன – விமர்ச்சிக்க.

5. "The role of Animal welfare Laws in India is Inadequate" – Comment.

"இந்தியாவில் விலங்குகள் நல சட்டங்களின் பங்கு போதுமானதாக இல்லை". கருத்தாய்வு செய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answer on EIGHT of the following and not exceeding 2 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்க்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Water foot priat.

நீர் அடியடி.

(b) National Green Corps.

தேசிய பசுமை பட்டாளம்.

(c) Cleaner Technologies.

சுத்தமான தொழில் நுட்பங்கள்.

(d) Hazardous substances.

அபாயகரமான பொருட்கள்.

(e) Animal Welfare Board of India.

இந்திய விலங்கின நலன் வாரியம்.

(f) Ground Water Management.

நிலத்தடி நீர் பராமரிப்பு.

(g) Bio – Reserve.

பல்லுயிர் இருப்பு.

(h) Energy efficiency.

ஆற்றல் திறன்.

(i) Kyoto and COP 21.

கியோடோ மற்றும் காப் 21.

(j) Green Peace Movement.

பசுமை அமைதி இயக்கம்.



Scanned by CamScanner

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கனுக்கு (ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்க மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி. தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Asiq applied to the State Pollution Control Board seeking permission to start an industry. Board convened a public hearing. Majority of residents objected to it. Taking other reasons the Board gave permission. The residents represented to the state government on decisions made by board. Can the state government hear the appeal? – Decide.

ஆசீக் என்பவர் தொழிற்சாலை துவங்குவதற்கு வாரியத்திடம் அனுமதி கேட்டார். வாரியம் பொதுக்கேட்பு கூட்டம் நடத்தியது. அவ்விடத்தில் வசிக்கும் பொது மக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். பின்னர் இதர காரணங்களை கருத்தில் கொண்டு வாரியம் அனுமதி அளித்தது. இதை எதிர்த்து அங்கு வசிப்பவர்கள் மாநில அரசிடம் பரிந்துறை மேற்கொண்டனர். அவ்வாறு மேல் முறையீடு அரசிடம் மேற்கொண்டால் அரசு இதன் மேல் நடவடிக்கை எடுக்க முடியுமா – தீர்மானிக்க.

8. In a 'Jilla Parishad' premises loud speakers were used for organizing wedding and other function. Further enquiry revealed that emanation of sound disturbed the residents. A public Interest litigation petition filed before the High Court. Parishad contended that High Court does not have Jurisdiction – Decide.

"ஜில்லா பரிசஹாத்" இடத்தில் ஒலிபெருக்கி திருமணங்கள் மற்றும் இதர விழாக் காலங்களில் பயன்படுத்தியது. அப்பகுதியில் விசாரணை மேற்கொண்ட பொழுது, இதன் பயன்பாடு அவ்விடத்தில் வசிக்கும் மக்களுக்கு பெரும் தொல்லையாக இருந்து வந்தது. ஆதலால் பொது நல வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஜில்லா பரிசஹாத் வாதத்தில் உயர் நீதிமன்றத்திற்கு ஆள்வரம்பு இல்லை என்றது. தீர்மானிக்க.

9. Kolapur mines applied for renewal of mining license in a tiger reserve area. The mines did not obtain forest clearance. The wild life institute of India state that mining license cannot be renewed as the area comes within the focal point of tiger movement. The Mines approach the National Green Tribunal. The government says wild life does not fall with in the perview of National Green Tribunal Act – Decide.

புலிகளுக்கான ஒதுக்கப்பட்ட பகுதியில் சுரங்கம் உரிமம் புதுப்பிக்க கோலாபூர் சுரங்கம் விண்ணப்பித்தது. ஆனால் காட்டு இலாக்கா அதிகாரிகளிடம் சான்றிதழ் பெறவில்லை. இந்திய வனவியல் வாரியம் இப்பகுதி புலிகள் நடமாடும் பகுதியில் அமைந்துள்ளதால் உரிமம் புதுப்பிக்க மறுக்கின்றது. கோலாப்பூர் சுரங்கம் உரிமம் புதுப்பித்தல் கேட்டு தேசிய பசுமை தீர்ப்பாயத்தை அனுகியது. ஆனால் அரசு வனவியல் துறை வனவிலங்கு பொருளானது தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன் கொண்டு வருதல் இயலாது என்று தன் வாதத்தை முன் வைத்தது. – தீர்மானிக்க.





Scanned by CamScanner

10. The Directorate General of foreign Trade permitted to import of goods to be dumped in India under the export and import policy. 'Waste links an NGO brought a case claiming e-waste is dumped in India which is contrary to e-waste rules and filed a case before National Green Tribunal – Decide.

வெளிநாடு வர்த்தக பொது இயக்குனரகம் இந்தியாவில் வெளிநாட்டு கணிணி கழிவுகளை இறக்குமதி செய்ய அனுமதித்தது. இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் படி குப்பைகளை குவித்தது. "கழிவுகள் தொடர்பகம்" என்ற தன்னார்வு கொண்டு நிருமம் கணிணி கழிவுகள் விதிகளுக்கு புறம்பாக குப்பைகளை இந்தியாவில் குவிக்கப்படுகின்றது என்று இயக்குனரகத்தை எதிர்த்து பசுமை தீர்ப்பாயத்தின் முன் வழக்கிட்டது – தீர்மானிக்க.

11. 'Mahendra real estate' carried out a project of building high – techcity. To carry out construction the ground water resource was used and soon the groundwater de-pleated. A case was filed before National Green tribunal stating that this project depleted the ground water resource and called for stoppage of project – Decide.

'மகேந்திரா எஸ்டேட் நிருமம்' உயர் தொழில் நுட்ப நகரம் அமைத்திடும் திட்டத்தை துவங்கியது. கட்டுமான பணிக்கு நிலத்தடி நீர் உபயோகப்படுத்தியதால் அவ்விடங்களில் நிலத்தடிநீர் வெகுவாக குறைந்தது. இத்திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் இது நிலத்தடி நீர் வளங்களை குறைக்கின்றது என்று தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன்பு வழக்கிடப்பட்டது. தீர்மானிக்க.



12. A District forest officer illegally cut down thousands of trees an a special – eco – sensitive Zone and sold them off with out any permission. The Government represented before National Green tribunal that the cutting of trees done to protect the area from pollution and to set up new plantation of Trees – Decide.

மாவட்ட காட்டு இலாக்கா அதிகாரி சிறப்பு சுற்றுச்சூழல் மிகுந்த பகுதியில் ஆயிரக்கணக்கான மரங்களை சட்டத்திற்கு புறம்பாக வெட்டி அதை உரிய அனுமதியின்றி விற்று விட்டார். ஆனால் அரசு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன்பு மேற்கொண்ட நடவடிக்கையில் புதிதாக மரங்கள் நட வேண்டியுள்ளதால் சில மரங்கள் தான் வெட்டப்பட்டது என்று வாதத்தை முன் வைத்தது – தீர்மானிக்க.

---



Scanned by CamScanner

Register No. [ | | | | | | | ]

**FSC** **2510–14**

(For the candidates admitted from 2009 – 2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2014.

(Five Years Regular Course)

Fourth Year – Seventh Semester

# ENVIRONMENTAL LAWS INCLUDING ANIMAL LAWS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Define environment. Analyse the relevant provisions of Indian Penal Code and Code of Criminal Procedure to tackle pollution.

   சுற்றுப்புறத்தை வரையறு. மாசுக்கேட்டை சீர் செய்ய இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள வகையங்களை ஆராய்க.

Scanned by CamScanner

2. Examine the salient features of the Environmental (Protection) Act, 1986.

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 ன் சிறப்பியல்புகளை விளக்குக.

3. Explain the various authorities constituted under the Wildlife Protection Act, 1972.

வன உயிர்கள் பாதுகாப்புச் சட்டம், 1972 ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புகளை விளக்கவும்.

4. "Right to life and livelihood includes right to clean and healthy environment" – Elucidate.

''வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் என்பது சுத்தமான மற்றும் சுகாதாரமான சுற்றுப்புற உரிமையையும் உள்ளடக்கும்'' – கருத்தாய்வு செய்க.

5. Analyse the contribution of Vellore Citizen Welfare Forum Vs Union of India on sustainable development in India.

இந்தியாவில் வளங்குன்றா வளர்ச்சி பெற வேலூர் குடிமக்கள் வாரியம் – எதிர் – இந்திய யூனியன் பங்களிப்பை ஆய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டனுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Fundamental duties.

அடிப்படை கடமைகள்.

(b) Green tribunal.

பசுமைத் தீர்ப்பாயம்.

(c) Stockholm declaration, 1972.

ஸ்டாக்ஹோம் பிரகடனம் 1972.

(d) Doctrine of public trust.

பொதுப் பற்றுரிமைக் கோட்பாடு.

(e) Eco-mark.

சுற்றுச் சூழல் குறியீடு.

(f) Vehicle pollution.

வாகனங்கள் மாசுக்கேடு.

(g) Acid rain.

அமில மழை.

(h) Agenda 21

நினைவுக் குறிப்பு 21.



Scanned by CamScanner

(i) Tehri dam case.

தேஹரி அணை வழக்கு.

(j) Bio-medical waste.

மருத்துவ உயிரி கழிவு.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following [not exceeding 2 pages each] by referring to relevant provisions of Law and decided with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கனுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Pithamakan, a marine biologist converted his agricultural land into shrimp culture farm. Makkalanban, an agriculturist neighbour objected on the ground that Shrimp culture would damage the sub-soil. Is his claim maintainable? Advice.

பிதாமகன் என்ற கடல்சார் தொழில்நுட்பவியலர் தனது விவசாய நிலத்தினை மாற்றி இறால் பண்ணை அமைத்தார். அவரது அண்டை நில விவசாயியான மக்களன்பன் இறால் பண்ணையினால் நிலத்தின் அடிமண் பாதிக்கப்படும் என எதிர்ப்பு தெரிவித்தார். இது நிலைக்கத்தக்கதா? அறிவுரைக்க.



8. The State Government decided to lay plastic roads in all metropolitan cities. To lay and maintain roads the government proposed to use 40 lakhs metric tons of plastic for every year. A leading social activist cum Advocate objected on the ground that it will be costlier and environmentally harmful which result in wasting of government money. Decide.

ஒரு மாநில அரசாங்கம் பிளாஸ்டிக்கினை வைத்து அனைத்து மாநகராட்சிகளிலும் ரோடுபோட முடிவு செய்து, ஒவ்வொரு ஆண்டும் ரோடு வேலை மற்றும் பராமரிப்புக்காக 40 லட்சம் மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பயன்படுத்த உத்தேசித்தது. ஓர் சமூக ஆர்வலர் மற்றும் வழக்குரைஞர் இந்த முடிவானது அரசிற்கு அதிக செலவினை ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி சுற்றுப்புற சீர்கேட்டினையும் ஏற்படுத்தும் என ஆட்சேபனை செய்தார். தீர்மானிக்க.

9. 'REAL CIRCUS' submitted an application to the Chennai Corporation to allow them to run cirus for 60 days and to keep various animals for the said days. PEOPLE WATCH, an NGO objected. Is it sustainable? Advice.

ரியல் சர்க்கஸ், 60 நாட்களுக்கு சர்க்கஸ் நடத்த அனுமதி வேண்டியும் அந்த 60 நாட்களுக்கு விலங்குகளை வைத்துக் கொள்ளவும் சென்னை மாநகராட்சியிடம் விண்ணப்பித்தது. PEOPLE WATCH என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தது. இது நிலைக்கத்தக்கதா? அறிவுரைக்க.



Scanned by CamScanner

10. NALLUR Municipality granted a licence to run flour mill in school zone. PEOPLE WATCH NGO filed a Public Interest Litigation before the High Court for cancelling the licence. The Municipality authorities contended that this is administrative matters and Courts cannot interfere. Advice.

பள்ளிகள் அமைந்துள்ள பகுதியில் மாவுமில் வைத்து நடத்திட நல்லூர் நகராட்சி அனுமதி வழங்கியது. மக்கள் பார்வை என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் அந்த அனுமதியை எதிர்த்து பொது நல வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. நகராட்சி வாதிடுகையில் இது நிர்வாக செயல்கள் இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என வாதிட்டது. அறிவுரைக்க.

11. TIRUPATHI Municipality ordered to convert 2 tanks into public play ground. Aggrieved by the decision of the Municipality, local residents approached the Supreme Courts on the ground that right to water is a Fundamental right. Decide.

திருப்பதி நகராட்சியானது இரண்டு குளங்களை பொது விளையாட்டு மைதானமாக மாற்ற ஆணையிட்டது. இந்த முடிவானது தண்ணீர் அடிப்படை உரிமை என்பதை மீறிய செயலாகும் என்ற கூறி அப்பகுதியில் குடியிருப்போர் உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தனர். தீர்மானிக்க.

12. Leakage of Poisonous gas from a Foreign registered company in MAHALA claimed lives of more than 2,500 residents and 75,000 people were injured. The parliament passed a law to take over and pursue all the claims of the victims. An NGO challenges the validity of law. Is it maintainable? Advice.



